"Chandra Raka"

A very interesting Tamil Novel

BY

Mr. S. M. Appasawmi Naidu

சந்திரரேகா

(அற்புதமான தமிழ் நாவல்.)

நீதிநூலுக்கு நூலாகவும் இன்பமான கதைக்குக்

கதையாகவுமிருக்கும்படியாக

ம-ா-ா-ஸ்ரீ எஸ். எம். அப்பாசாமி நாயுடு

அவர்களால் இயற்றப்பட்டது.

வாசிக்க வாசிக்க இன்பமாயிருக்கும்.

கம்பராமாயணம், கைவல்லியம், திருக்குறள், பாரதம், பாகவதம், பகவத்கீதை முதலியவைகளிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

தும்ப மலர்போல வெளுப்பான கடுதாசியில் முத்துப்போன்ற எழுத்துகளால் அச்சிடப்பட்டு நேர்த்தியாகப் பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை—தபால் சார்ஜ் உள்பட ரூ. 1

மானேஜர்,

இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,

117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

வருஷசந்தா தபால் சார்ஜ் உள்பட ரூ. 5-4-0.

சகல விபரங்களுக்கும் மானேஜர், இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்.

தனி காப்பி, அணு 4.

ஸ்ரீ

பெரியாழ்வார் அருளிச்செய்த

திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியும்

இவை வைத்த மாநிதி—மூடும்பை

கோபாலகிருஷ்ணமாச்சாரியார் அவர்களால்

உரையுடன் இயற்றப்பட்டது.

இதனுள் அடங்கியவை.

1. பெரியாழ்வார் சரித்திரம்
2. திருப்பல்லாண்டு (உரையுடன்)
3. பெரியாழ்வார் திருமொழி (உரையுடன்)
4. செய்யுள் முதற்குறிப்பு அகராதி

குறிப்பு:—இதில் அவசியமான பதப்பிரயோஜனங்களையும் இன்றியமையாத இலக்கணக் குறிப்புகளையும், புராணக்கதைகளையும் எடுத்துக்காட்டி, பதப்பொருள், கருத்து, விசேஷார்த்தம், சொற்சுவை, பொருட்சுவை, யாப்பிலக்கணம், அணியிலக்கணம், ஐதிஹ்யம் அங்கங்கே விளக்கியிருத்தலோடு ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயங்களையும் விவரிக்கப்பட்டிருக்கிறது. பூர்வாசார்யர்களின் வியாக்கியான வாக்கியங்களும் உரியஇடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. அத்தியாபகற்கு மிகவும் அனுகூலமாகயிருக்கும். இதன் விலை ரூ. 1 4 0.

தபால் கூலி பிரத்தியேகம்.

மானேஜர், "இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,"
117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

924

Guaranteed Circulation 1,000 Copies.

Registered No. M. 1124.

Vol. I] [No. 3

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
12 SEP 1914
MADRAS.

இந்தியன் லா ஜானல்

(மாதம் நான்குமுறையாக பிரதி சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.)

1914ஹு ஆகஸ்டுமீ 29உ சனிக்கிழமை.

ரிபோர்ட்டுகள்.

பிரிவிகவுன்சில்.

இந்தியன் ஹைகோர்ட்டுகள்.

ஜட்ஜஸ் ஸிட்டிங்ஸ்.

PRINTED AND PUBLISHED BY S. SUBRAMANYA AIYAR,
AT THE INDIA PRINTING WORKS, 117, ARMENIAN STREET, MADRAS.—1914.

"Chandra Raka"

A very interesting Tamil Novel

BY

Mr. S. M. Appasawmi Naidu

சந்திர ரேகா

(அற்புதமான தமிழ் நாவல்.)

நீதிநூலுக்கு நூலாகவும் இன்பமான கதைக்குக்

கதையாகவுமிருக்கும்படியாக

ம-ா-ா-ஸ்ரீ எஸ். எம். அப்பாசாமி நாயுடு

அவர்களால் இயற்றப்பட்டது.

வாசிக்க வாசிக்க இன்பமாயிருக்கும்.

கம்பராமாயணம், கைவல்லியம், திருக்குறள், பாரதம், பாகவதம், பகவத்கீதை முதலியவைகளிலிருந்து மேற் கோள்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

தும்ப மலர்போல வெளுப்பான கடுதாசியில் முத்துப்போன்ற எழுத்துகளால் அச்சிடப்பட்டு நேர்த்தியாகப் பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை—தபால் சார்ஜ் உள்பட ரூ. 1

மானேஜர்,

இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,

117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

வருஷசந்தா தபால் சார்ஜ் உள்பட ரூ. 5-4-0.	சகல விபரங்களுக்கும் மானேஜர், இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்.	தனி காப்பி, அணா 4.

THE INDIAN LAW JOURNAL.

(TAMIL EDITION.)

இந்தியன் லா ஜர்னல்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 SEP 1914
MADRAS.

(தமிழ் பிரசுரம்.)

(மாதம் நான்குமுறை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.)

வருஷ சந்தா.

	ரூ.அ.பை.
இந்தியா, பர்மா, ரெங்கூனுக்கு தபால் சார்ஜ் உள்பட	5—4—0
சிங்கப்பூர் பினங்கு	8—0—0
ஒரு வார சஞ்சிகை	0—2—0

பத்திரிகை வேண்டியவர்கள் சந்தாத் தொகையை அனுப்பி கடிதம் எழுதவேண்டும். இல்லாவிடில் வி. பி. தபாலில் அனுப்பும்படி உத்திரவு செய்யவேண்டும்.

மாதிரி சஞ்சிகை வேண்டியவர்கள் ½ அணு தபால் ஸ்டாம்பு அடக்கம் செய்து அனுப்பவேண்டும்.

விளம்பர விகிதம்.

	ரூ. அ. பை.
48 சஞ்சிகைகளிலும் ஒரு வருடத்திற்கு ஒரு பக்கத்திற்கு	120—0—0
6 மாதங்களுக்கு ...	60—0—0
3 ,, ...	35—0—0

இந்த பிரகாரம் பாதி பக்கத்திற்கும், கால் பக்கத்திற்கும் கணக்கு செய்துகொள்ளவேண்டும். சாஸ்வத ஒப்பந்தம் செய்கிறவர்கள் மானேஜருடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும்.

விளம்பரம்.

இந்தியன் லா ஜர்னலுக்கு சந்தாதார்கள் சேர்க்க கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

மானேஜர்,

இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,

117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

ABBREVIATIONS

குறிப்புகள்.

I. L. R.=Indian Law Reports.

இ. லா. ரி.=இந்தியன் லா ரிப்போர்ட்டுகள்.

5 Mad. 145=5 Madras 145.

5. சென். 145=5-வது வால்யூம், சென்னப்பட்டணம், 145-வது பக்கம்.

Cal=Calcutta.

கல்=கல்கத்தா.

Bom=Bombay.

பம்=பம்பாய்.

All=Allahabad.

அல=அலகபாத்.

I. C=Indian Cases.

இ. கே=இந்தியன் கேஸ்கள்.

I. L. J=Indian Law Journal.

இ. லா. ஜெ=இந்தியன் லா ஜர்னல்.

M. L. J=Madras Law Journal.

ம. லா. ஜெ=மதிராஸ் லா ஜர்னல்.

M. W. N=Madras Weekly Notes.

ம. வி. நோட்=மதிராஸ் வீக்லி நோட்டீஸ்.

(இன்னும் சேர்க்கப்படும்.)

இந்தியன் லா ஜர்னல்

மாதம் நான்குமுறை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.

Vol. I. தொ. 1. | 29TH AUGUST 1914. | No. 3. நெ. 3.

இந்தியன் லா ஜர்னல்.

1914௵ ஆகஸ்டு௴ 29௳ சனிக்கிழமை.

THE WAR AND TRADE LICENSE.

யுத்தமும் வ்யாபார லைசென்ஸும்.

இப்போது நம் மஹா சக்கிரவர்த்திக்கும் ஜர்மனி, ஆஸ்ட்ரியா தேசத்தவர்களுக்கும் நடந்துவரும் யுத்தம் காரணமாய் நம் விரோதி தேசத்தவர்கள் நம்தேசத்தில் செய்துவரும் வியாபார விஷயமாய் பெங்கால் கவர்ன்மெண்டாரும் பொம்பாய் கவர்ன்மெண்டாரும் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதாவது நம் சக்கிரவர்த்தி அரசாக்ஷிக்குட் பட்டவர்களுக்கும் நம்விரோதிகளாகிய ஜர்மனி, ஆஸ்ட்ரியா தேசத்தவர்களுக்கும் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தங்கள் யெல்லாம் ரத்தாய் விட்டனவென்றும் அவ்விரோதிகளோடு சம்மந்தப்பட்ட வியாபாரக் கூட்டுகளெல்லாம் கலைந்துவிட்டன என்பது. ஆனால் அப்படி கலைந்துபோன வியாபாரங்களெல்லாம் நம்தேசத்தவர்கள் தாங்களாகவே அந்த வியாபாரங்களை மேல்கொண்டு நடத்த கவர்ன்மெண்டார் சம்மதிப்பார்போலும். நம்விரோதி தேசத்தவர்கள் தனித்தனியே இதுவரையில் இவ்விடத்தில் வியாபாரம் செய்துகொண்டு வந்தவர்களாயிருந்தால் அவர்கள் இனிமேல் அந்த வியாபாரங்களை நடத்திவர அனுமதி கேட்டுக் கொள்ளலாம்.

அப்படிப்பட்ட மனுக்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே கவனித்து மஹாசக்கிரவர்த்தியின் ஆக்ஞையை பெற்று லைசென்ஸு கொடுக்கப்படும். இதனால் இத்தேசத்திலேயே ஸ்திரமாக வசித்துக்கொண்டிருப்பவர்களாகவிருந்தாலும் விரோதி தேசத்தவர்களுக்கு அப்படி ஸ்திரவாஸிகளாக யிருப்பதினாலேயே உள்ளூர் வியாபாரம் செய்ய ஸ்வாதீனம் கிடையாதென்று செவ்வையாய் தெரிகிறது.

THE EMPLOYMENT OF INDIAN TROOPS AGAINST THE WHITES.

ஐரோப்பாவில் நடக்கும் யுத்தமும் சுதேச சேனைகளும்.

வெகு காலமாய் ஐரோப்பியர்களுக்கு ஆசியா, ஆப்பிரிக்கா கண்டங்களிலுள்ள சேனைகளை ஐரோப்பிய சேனைகளுடன் யுத்தம் செய்யச்செய்வது நியாயமல்லவென்று அபிப்ராயம். ஏனெனில் ஆசியா, ஆப்பிரிக்கா கண்டங்களிலுள்ள ஜனங்கள் மூர்க்கர்கள் என்றும், நாகரீகமான சேனைகள் சில ஒழுங்குகளுக்கு கட்டுப்பட்டு யுத்தம் செய்வார்களென்றும் அப்போர்

பட்ட ஒழுங்குகளை இந்த தேர்ச்சியடையாத மூர்க்கர்கள் அனுசரிக்க மாட்டார்கள் என்பதாம். ஆனால் கொஞ்சகாலத்திற்குமுன் சைனாதேசத்தில் பெகின் நகரத்தை ஐரோப்பியசேனைகளும் நம் இந்திய சுதேசசேனைகளும் முற்றுகைபோட்டு பிடித்தார்கள். அக்காலத்தில் மனிதர்களிடத்தில் பூததயை, பச்சாத்தாபம் முதலிய குணங்கள் ஐரோப்பிய சேனைகளைவிட நம்மவர்களுக்கே அதிகமாக விருந்ததென்றும், அவர்கள் அன்னியர்களுடைய சொத்துக்களையும், உயிர்களையும், காப்பாற்றினார்களென்றும் ஸ்த்ரீகளை ரொம்ப கௌரவித்து அவர்களுக்கு மானபங்கம் உண்டாகாமல் பாதுகாத்தார்களென்றும் செவ்வையாக ஏற்பட்டது. அப்போது நம் சுதேசத்து சேனைகளுடைய நடத்தை கொஞ்சம்கூட குற்றம் சொல்லத்தகாததாகயிருக்க ஜர்மனி சேனைகளுடைய நடத்தை யெல்லாத்திலும் கொரேமாயிருந்தது. இது இப்படியிருக்க 1870-வது வருஷத்தில் ஜர்மனியாருக்கும் பிரான்சு தேசத்தாருக்கும் நடந்த யுத்தத்தில் பிரான்சு தேசத்தார் டர்கோஸ் என்னும் ஆப்ரிக்கா கண்டத்து சேனைகளை உபயோகித்தார்கள். இப்போது நடக்கிற யுத்தத்திலும் ப்ரான்சு தேசத்தார் ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள அல்ஜீரியா தேசத்தவர்களை உபயோகித்துக்கொண்டு வருகிறார்கள்.

ஆகையால் இனி ஐரோப்பியர்களோடு ஆசியா, ஆப்பிரிக்கா கண்டத்தவர்களை சண்டைக்கு விடக்கூடாது என்று சொல்வது ஒழுங்குபடாது. இதுகளையெல்லாம் உத்தேசித்து இப்போது நம் கவர்ன்மெண்டாரும் ஐரோப்பாகண்டத்தில் ஜர்மனி, ஆஸ்ட்ரியா தேசத்தவர்களுடன் யுத்தம் செய்ய நம் சுதேச சேனைகளை அனுப்புவதாக தீர்மானித்து அனுப்பிக்கொண்டு வருகிறார்கள்.

THE WAR AND HOW MAY IT END.

சண்டை.

இப்போது ஐரோப்பாவில் நடக்கிற சண்டையைப்பற்றி இவ்விடத்தில் ஜனங்களுக்கு சரியானபடி சமாசாரங்கள் தெரியாததனால் சாமானிய ஜனங்கள் கடைத்தெருவில் ஒன்றும் தெரியாதவர்கள் யெல்லாம் தெரிந்தவர்களாக பேசும் கதைகளைக்கேட்டு ரொம்பவும் பயந்து அந்த பயத்தினால் கொடுக்கல் வாங்கல் முதலிய வியாபாரங்களை வழக்கப்படி செய்யாமல் தாங்கள் நஷ்டப்படுவதும் தவிர வெகு ஜனங்களுக்கு கஷ்டத்தையும் உண்டு பண்ணிக்கொண்டு வருகிறார்கள்.

ஆனால் இதனுடைய விருத்தாந்தங்களை தீர விசாரித்து இப்போது நடந்துவரும் சண்டைகள் போகிறபோக்கும் செவ்வையாய் அறிந்துகொண்டால் யாதொரு கவலைக்கும் இடமில்லையென்று நன்றாய்த் தெரியும். இப்போது நம் மஹாசக்கிரவர்த்திக்கு விரோதிகளாக யிருந்து யுத்தம் செய்துகொண்டு வருபவர்கள் ஜர்மனி, ஆஸ்ட்ரியா என்கிற இரண்டு தேசத்தார்கள்தான். நம் சக்கிரவர்த்திக்கு அனுகூலர்களாயிருந்து அவருடன் கூட கலந்து யுத்தம் செய்பவர்களோ ருஷியர், ஸர்வியர், போலீஸ் இம்மூவர்களும். ஜர்மனி, ஆஸ்ட்ரியா இரண்டுக்கும் கிழக்கே யுள்ளவர்கள். ஆலெண்ட், பெல்ஜியம், ப்ரான்ச் இம்மூவர்களும் மேற்கேயுள்ளவர்கள். ஆக நம் மஹா சக்கிரவர்த்தி யுள்பட ஏழு தேசத்தார்கள். இதுவுமல்லாமல் ராஜ்ய விஸ்தீரணம், நிலவளம், ஜனத்தொகை, இந்த பலங்களை கவனித்தால் நம்விரோதிகள் ஒரு பங்கும் அவர்களோடு யுத்தம் செய்பவர்கள் குறைந்தது பத்து பங்குமாக விருக்கும். இதுவுமல்லாமல் இதர கண்டங்களில் உள்ள காலனிகள், அடங்கிய ராஜ்யங்கள் இதுகளை கணக்கெடுத்தால் இங்கிலாண்டு, பிரான்சு, ருஷியா இவர்கள் ஒவ்வொ

ருவருக்கும் உள்ளதே ஜர்மனி, ஆஸ்ட்ரியா இவ்விருவர்களையும் விட எவ்வளவோ மடங்கு அதிகமாக விருக்கும்.

மேலும் ஜர்மனி, ஆஸ்ட்ரியா இவ்விரு தேசத்தாருக்கும் தம் தேசத்திலுள்ள உற்பத்திகளைக் கொண்டே ஜீவிக்கமுடியாது. அந்நிய தேசங்களுடன் செய்யும் வியாபாரங்களே அவர்களுக்கு ப்ராணாதாரமாயும், எல்லா சாய்காலுக்கும், செல்வங்களுக்கும், காரணமாயுள்ளது. இந்த யுத்தம் காரணமாக அவர்களுடைய சரக்கு அணுக்கூட வெளியே அனுப்பமுடியாது. அவர்களுக்கு வேண்டிய தான சரக்குகளும் வெளியிலிருந்து ஒரு அணுமாத்திரம்கூட உள்ளே வரவும்கூடாது. ஏனென்றால் வீட்டைச்சுற்றி நாலுபக்கமும் விரோதிகள் கவிழ்ந்துகொண்டு அடிக்கும்போது உள்ளேயிருந்து வெளியே வருதலாவது, வெளியேயிருந்து உள்ளே போதலாவது எப்படி சாத்தியம்.

ஒருவேளை அத்தேசங்களுக்கு சமீபமாயிருக்கிறவும் இந்த யுத்தத்தில் ஒரு கக்ஷியிலும் சம்பந்தப்படாமலுமிருக்கிற தேசங்கள் மூலமாய் தங்களுக்கு அவசியமாயுள்ளதுகளை தருவித்துக்கொள்ளக்கூடாதோ என்ற ஒரு கேள்வியுண்டாகலாம். அதுவும் முடியாது. ஏனென்றால் யுத்தத்தில் சம்பந்தப்படாதவர்கள் தம் தேசங்கள் மூலமாய் இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்டுள்ளவர்களுக்கு யாதொரு வஸ்துவும் போகும்படி வழி விடப்படாதென்பது (இன்டர்னேஷனல் லா) பர ராஜ்யதந்திர சட்டம்.

இப்பேர்ப்பட்ட நிர்பந்தங்களுக்குள் அகப்பட்டு நெருக்கப்பட்டிருக்கிற ஜர்மனி, ஆஸ்ட்ரியா யென்கிற இரண்டு தேசத்தாரும் நடந்து வரும் யுத்தத்தில் ஜயத்தை அடைந்து நமக்கெல்லாம் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் உண்டுபண்ணக்கூடுமென்று எண்ணுவதுதெரியாத தன்மையே யல்லது வேறல்ல.

நாம் மறு நம்பரில் இந்த விஷயத்தைப்பற்றி இன்னும் ஸவிஸ்தாரமாய் எழுதுவோம்.

ALLAHABAD HIGH COURT.

அலகபாத் ஹைக்கோர்ட்.

ஸிவில் ரிவிஷன் நெ. 45 1914.

ஸ்வராத்ராம் ராம்ஸரன் ராம்—வாதி.

v.

ஸாரூப்லால் ராம்—ப்ரதிவாதி.

ஸிவில் ப்ரொஸீஜர்கோட், ஆர்டர் 30 ரூல் 1—கம்பெனி பேரில் வியாஜ்யம்—ப்ராதில் கையெழுத்து போடுவது—இரண்டு மூன்று பேர்கள் கூட்டாகச் சேர்ந்து வியாபாரம் செய்து வந்தால் அவர் கம்பெனியின் விலாஸத்தின் பேரை வைத்து தாவாவை செய்யக்கூடும்.

ஒரு கம்பெனி விலாசத்தின் பேரைவைத்து வியாஜ்யம் செய்யும் காலத்தில் கூட்டாளிகளில் ஒருவர் ப்ளெயிண்டில் கையெழுத்துப் போட்டால் போதுமானது.

சுந்தரலால் ஜட்ஜ் தீர்ப்பு.—ஸ்வராத்ராம் ராம் ஸரன் ராம் என்கிற விலாசத்தின் பேரை வைத்து அவர்களுக்கு வரவேண்டிய தொகைக்காக இந்த வியாஜ்யம். இந்த கம்பெனியில் இரண்டு மூன்று பேருக்கு மேற்பட்டு கூட்டாளிகள் உண்டென்பதைமறுக்கவில்லை. ஆர்டர் 30, ரூல் 1 படி இரண்டு மூன்று பேர்களுக்கு சம்பந்தமான வியாஜ்யத்தை அவர்கள் கம்பெனி விலாசத்தின் பேரைவைத்து செய்யலாம். இந்த கம்பெனிக்கு இரண்டு அல்லது இரண்டுபேருக்கு மேற்பட்டவர்கள் கூட்டாளிகளாக யிருக்கவேண்டுமென்பது ஒன்றுதான் இந்த ஸெக்ஷன்படி அவசியமானது. ஒருவனே வேறு விலாசம் வைத்து வியாபாரம் செய்து வந்தால் அப்பேர்ப்பட்டகேஸுக்கு இந்த ஸெக்ஷன் பொருந்தாது. ஆகை

யால் இந்த வியாஜ்யம் ஆர்டர் 30, ரூல் 1 படி கிரமமாக செய்யப்பட்டது தான்.

முதலாவது இந்த ப்ளெயிண்டியில் கையெழுத்துப் பண்ணவேண்டியது யார் என்று தீர்மானிக்கவேண்டியது. இரண்டாவது விஷயம் சட்டப்படி கூட்டு வியாபாரங்களில் ஒவ்வொரு கூட்டாளியும் தனக்காகவும் மற்ற கூட்டாளிகளுக்காகவும் ஏஜண்டாகவும் கையெழுத்து செய்யலாம். இந்த வியாஜ்யத்தில் ப்ளெயிண்டில் ஜக்மோஹன் என்கிற ஒரு கூட்டாளி கையெழுத்து போட்டிருக்கிறார். இந்த ரூல் இரண்டாவது பிரிவுபடி கூட்டாளிகள் யாராவது ஒருவர் கையொப்பமிட்டால் போதும். எல்லா கூட்டாளிகளுமாவது அவர்களில் இரண்டு பேராவது கையெழுத்து போடவேண்டுமென்பது அவசியமில்லை. இரண்டு பேராவது கையெழுத்து போட்டிருக்கவேண்டுமென்பது கீழ்கோர்ட்டாருடைய அபிப்ராயம். இந்த ஸெக்ஷனில் இரண்டு பாகம் உண்டு. ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு விஷயத்தை பொருந்தியது. முதல்பாகம் எப்போது கம்பெனி விலாசத்தின் பேரைவைத்து வியாஜ்யம் செய்யலாம் என்பதை நிர்ணயிக்கிறது. அதில் இரண்டு அல்லது இரண்டு பேருக்கு மேற்பட்டவர்கள் கம்பெனியில் கூட்டாளிகளாக இருக்கவேண்டும் என்பதை முக்கிய கருத்தாய் சொல்லுகிறது. இரண்டாவது பாகம் கையெழுத்து யார் போடுவது யென்பதை குறிக்கிறது. இந்த இரண்டு பாகத்தினுடைய உத்தேசம் வெவ்வேறு. ஆகையால் இந்த வியாஜ்யத்தில் ஜஹன்மோஹன் மாத்திரம் கையெழுத்துப் போட்டிருப்பது போதுமானதுதான். அது கிரமந்தான் என்பது என் அபிப்ராயம்.

ஆகையால் கீழ்கோர்ட் டிக்ரியை ரத்துசெய்து சிவில் ப்ரொஸீஜர் கோட், ஆர்டர் 41, ரூல் 23 படி இந்த கேஸை மறு விசாரணைக்கு திருப்பியிருக்கிறது.

ALLAHABAD HIGH COURT.

அலகாபாத் ஹைகோர்ட்.

கணபத் ... ... வாதி.

v.

சுந்தரி ... ... பிரதிவாதி.

S. A. No. 216 of 1914.

ஒரு பாரியை தன்னுடைய புருஷனுடைய வீட்டில் தனக்கு வசிப்பதற்கு இடம் கொடுக்கவேணுமென்று நிர்ப்பந்திக்க சட்டப்படி அதிகாரம் உள்ளவளா—சட்டப்படி ஒரு மனைவி தன் பர்த்தாவிடத்தில் எவ்வளவு வரை சுதந்திரமுள்ளவள்—வாதி தன் மனைவியை வீட்டை காலி செய்யும்படி செய்திருக்கும் இஜக்ட்மென்ட் தாவாவில் மனைவியின் நடத்தை நல்லது பொல்லாததென்பது சம்மந்தப்பட்டதல்ல.

வியாஜ்யச் சுருக்கம்.

வாதியின் மனைவி சுந்தரியென்பவள் தன் புருஷன் வீட்டில் ஒரு அறையில் குடியிருந்தாள். வாதி புருஷன் தன் மனைவி துர்நடத்தையுள்ளவளென்றும், வெகு காலம் தன்னை விட்டு பிரிந்து தன் ஸம்ரக்ஷணையில் இல்லையென்றும், இப்போது துராகிருதமாய் தன் வீட்டில் ஒரு பாகத்தை ஸ்வாதீனம் செய்து கொண்டு இருக்கிறாளென்றும், அவளை இஜக்ட் (காலி) செய்யவேணுமென்றும் தாவா செய்தான்.

மனைவி பிரதிவாதி புருஷனுடைய நடத்தை தவறுதல் என்றும் அவன் ஒரு வைப்பாட்டியை வைத்துக்கொண்டு அவளுடைய தாக்ஷிண்யத்துக்குட்பட்டு இந்த வியவஹாரங்களை செய்கிறானென்றும், தனக்கு தன் புருஷன் வீட்டில் குடியிருக்க சுவாதீனம் உண்டென்றும் எதிர் வாதம் செய்தாள். அசல் கோர்டார் பிரதிவாதி துர்நடத்தையுள்ளவள் என்றும் வெகுகாலம் முன்னே புருஷனைவிட்டு பிரி

ந்து விட்டாளென்றும் ருஜுவானதாகக் கொண்டு வாதிக்கு அனுகூலமாக டிக்ரி கொடுத்தார். அப்பீலில் ஜில்லா ஜட்ஜ் பிரதிவாதியின் துர்நடத்தையைப்பற்றிய ருஜு சந்தேகிக்கத்தக்கதென்றும், தற்காலம் அவளிடத்தில் துர்நடத்தையில்லையென்றும் கொண்டு கீழ்கோர்ட் டிக்ரியை மாற்றி வாதியின் தாவாவை தள்ளிவிட்டார். வாதி ஹைகோர்டுக்கு ஸகிண்ட் அப்பீல் செய்தார்.

ஹைகோர்ட் தீர்ப்பு.—பிரதிவாதியின் துர்நடத்தை விஷயம் ஒரு பக்கம் நிற்க, ஹிந்து மனைவி தன் புருஷனுடைய வீட்டில் குடியிருக்க சுவாதீனம் உள்ளவளா யில்லையா என்பதைப்பற்றியும், புருஷனுக்கு அவளை கட்டாயம் காலிசெய்யும்படி நிற்பந்திக்க அதிகாரம் உண்டா இல்லையா என்பதும், சந்தேகமற தீர்ந்தவிஷயமாகயில்லை. பால்தேவ்தாஸ் ங. ஷாம்லால். இந்த கேஸில் இந்த கோர்ட்டார் தகப்பனுடைய தாவாவின்பேரில் பிள்ளையை காலிசெய்யும்படியாக டிக்ரி செய்திருக்கிறார்கள். பிதுரார்ஜிதமான வீட்டில் பாத்தியதையுள்ள ஒரு ஹிந்து குமாரனும்கூட ஏக குடும்பமா யிருக்கிறவரையில் தன் தகப்பனுக்கு விரோதமாய் ஸர்வ ஸ்வாதீன அதிகாரம் அடையமாட்டானென்று அபிப்ராயம் கொண்டிருக்கிறார்கள். இந்த கேஸில் மனைவிக்கு வீட்டில் ஒரு பாத்தியதையும் கிடையாது. ஆனால் தன் புருஷனிடத்தில் ஜீவனும்சத்திற்கும், குடியிருப்புக்குசிதமான இடமும், ஏதோ ஒரு துர்நடத்தையால் இழந்து விடாவரையில் பாத்தியதை உண்டு. அவளுக்கு புருஷனோடு கூடி வசிக்கவும் கேட்க அதிகாரமுண்டு. எவ்விதத்திலும் வீட்டில் அவளுக்கு ஒரு பாத்தியதையும் கிடையாது. இந்த வியாஜ்யத்தில் வாதி வீடு தனக்கு ஸர்வஸ்வாதீனமென்பதாக தாவா செய்கிறான். மனைவிக்கு தன் புருஷனிடத்திலிருந்து ஜீவனும்சம், குடியிருப்புக்குயிடம், முதலியவற்றை கேட்க்கும் பாத்தியா பாத்திய விஷயம் இந்த சூட்டில் சம்பந்தப்பட்டவைகளல்ல. வீடு புருஷனுக்கு ஸர்வ ஸ்வாதீனமானது. மனைவிக்கு காலி செய்யமாட்டேன் என்று சொல்லும்படியான அதிகாரம் இல்லை அவளுடைய நடத்தைகள் இதில் அவசியமான விஷயங்களல்ல. வீடு புருஷனுடையதா அல்லவா என்பது தான் இதில் கவனிக்ககூடியது. ஆகையால் வாதி அவனுடைய தாவாபடிக்கு டிக்ரி பெறத்தக்கதுதான். ஆகையால் கீழ் அப்பீல் கோர்ட் டிக்ரியை ரத்துசெய்து அசல் கோர்ட் டிக்ரியை காயம் செய்கிறோம். இந்த டிக்ரியானது மனைவிக்கு உள்ள ஜீவனும்சம் முதலிய பாத்தியதைகளை பாதிக்காது. உபய கக்ஷிக்காரர்களும் அவரவர்கள் சிலவை அவரவர்கள் அடையவேண்டும்

ALLAHABAD HIGH COURT.

அலகபாத் ஹைகோர்ட்.

S. A. No 1117 of 1913.

மேஹ்ராஜாவஷ்—பிரதிவாதி.

ங

அப்துல்லாகான் மற்றவர்களும். }—வாதிகள்.

டிரான்ஸ்வர் ஆப் ப்ராபர்டி ஆக்ட், ஸெக்ஷன் 55-கிரயம் செய்தவருக்கு தனக்கு சேர வேண்டிய கிரய சேஷத்துக்காக சொத்தின் பேரில் உள்ள பொருப்பு-கிரய சேஷத்துக்காக முதல் விக்ரியதாரிடத்திலிருந்து கிரயம்பெற்ற மூன்றுவது மனிதனுடைய பத்தம்.

வியாஜ்யச் சுருக்கம்.

1901 வருஷம் ஜூன் மாதம் 20வ வாதிகள் கல்லிமல் என்பவனுக்கு சில சொத்துக்களை ரூபாய் 800-க்கு கிரயம் செய்தார்கள். இந்த விக்ரிய துகையில் ரூபாய் 150ஐ கல்லிமல் இடத்தில் நிறுத்தி தங்கள்பேரில் டிக்ரி பெற்றிருந்த மேஹ்ராஜ், கரியாமல் என்பவர்

களுக்கு சேர்ப்பிக்கும்படியாய் ஏற்பாடு செய்தார்கள். அவ்விருவர்களிடத்திலேயே இந்த விற்கப்பட்ட சொத்து சுவாதீன அடமானத்தில் இருந்தபடியால் அதற்கு சேர வேண்டிய ரூபாய் மூந்நூரையும் கிரயம் வாங்கினவனிடத்திலேயே கொடுத்து வைத்தார்கள். கல்லிமல், கரியாமல், மேஹ்ராஜ் இவர்களுக்கு சேரவேண்டிய துகையைக் கொடுக்கவில்லை. ஆகையால் அவர்கள் வாதிகள் பேரில் தங்கள் டிக்ரியை நிறைவேற்ற எத்தனித்தார்கள். ஆகையால் வாதிகள் 1904-ம் வருஷம் ஜூலை மீ 25௳ அவர்களுக்குதங்களுடைய சில இதர சொத்துக்களை அடமானம் செய்து அதன் மூலமாய் அவர்களுக்கு பணத்தை சேர்பித்தார்கள். பின்பு 1909-ம் ௵ மேமீ 14௳யில் கரியாமல், மேஹ்ராஜ் என்பவர்கள் கல்லீமலிடம் அவன் 1901-ம் வருஷம் ஜூன்மீ 20௳யில் கிரயம் வாங்கியிருந்த சொத்தை தாங்கள் கிரயம் வாங்கிக்கொண்டார்கள். இப்போது வாதிகள் கரியாமல், மேஹ்ராஜ், என்ற இருவர்கள் பேரிலும் தங்களுக்கு சேரவேண்டிய கிரய துகைகளுக்காக தாவா செய்கிருர்கள் பிரதிவாதிகள் இந்த தாவா டைம் பாராய் விட்டதென்றும், கிரய பத்திரத்தில் பூரா பணம் சேர்ந்து விட்டதென்றும் செப்பியிருப்பதால் கிரய சேஷத்திற்கு சொத்தின்மேல் யாதொருவித பாத்தியதையும் கிடையாதென்றும் கல்லீமல் பேரில் அவர்களுக்கு யிருந்த பாத்யதை காலவதி தோஷத்தால் இழந்துவிட்டதாலும் ட்ரான்ஸ்வர் ஆப் ப்ராபர்டி ஆக்ட், ஸெக்ஷன் 55, 4B படி கிரயம் செய்பவருக்கு கிரய சேஷத்திற்காக விக்ரிய சொத்தின்மேல் உள்ள பாத்தியதை நேராக கிரயம் வாங்கினவர்மேல் செல்லத்தக்கதே யல்லது அவரிடத்தில் கிரயம் வாங்கின மூன்ருவது மனிதனை பாதிக்காது என்றும் மறுக்கிருர்கள். மேலும் மேஹ்ராஜ், கரியாமல் இவர்களுக்கு கிரயசேஷம் சேராதிருப்பது தகவல் இல்லையென்றும், ஆகையால் அவர்களை பத்தப்படுத்தாதென்றும் எதிர் வாதம்.

ஹைகோர்ட்டு தீர்ப்பு.—முதலாவது கிரயத் தொகையில் சில பாகம் வாதிகளுக்கு சேர வில்லை என்பது பிரதிவாதிகளுக்கு தகவல் உண்டென்று ருஜூவாகயிருக்கிறது. ஆகையால் அந்த வாதம் செல்லாது.

இரண்டாவது லிமிடேஷன் ஆக்ட், 1-வது ஷெட்யூல், 111-வது ஆர்டிகில்படி முதல் கிரயம் வாங்கினவர் பேரில் இருந்த பாத்யதை காலாவதி தோஷத்தால் போய்விட்டதென்பது நிஜம். அதனுல் கிரயசொத்தின்மேல் உள்ள பாத்தியதையும் கூடபோய்விடுமா என்பது கேழ்வி. வாதிகளுக்கு தங்களுக்கு சேர வேண்டிய கிரய சேஷத்தை கிரயம் வாங்கினவனிடத்திலிருந்து சேரவேண்டிய ஓர் கடன் போல் வசூல் செய்ய பாத்தியதை யுண்டு. வாதிகளுக்கு உள்ள பாத்தியதை இரண்டு விதம். கிரய சேஷத்தை அடமானத்துகையாக கிரய சொத்தின்மேல் வசூல் செய்யலாம். அல்லது கிரயதாரன்மேல் சாதாரண கடன் ஒப்பந்தம் நபர் பேரில் வசூல் செய்யலாம். நபர் பேரில் வசூல் செய்ய காலாவதி தோஷம் வந்துவிட்டது. அதனுல் கடன் செத்துப் போகவில்லை. வாதிகளுக்கு உள்ள இரண்டு மார்க்கங்களில் ஒன்று போய்விட்டாலும் கடன் அப்படியே தானிருக்கிறது. மற்ருெரு மார்க்கம் வாதிக்கு இன்னம் உள்ளதுதான். பிரிவி கௌன்சலும் (I. L. R. 7 All. 502.) ராம்தின் v. கல்கப்ரசாத் கேஸில் கீழ்வருமாறு சொல்லியிருக்கிருர்கள்:—

வாதியின் பெடிஷனில் இரண்டுவித தனித் தனிமார்க்கங்கள் கோரப்படுகிறது. ஒன்று அடமான சொத்தின்பேரில், மற்ருென்று பிரதிவாதியின் இதர சொத்தின் பேரிலும், நபர்பேரிலும், அடமானசொத்து விஷயத்தைப்பற்றி சந்தேகமில்லை. லிமிடேஷன்

லா பணப்பத்திரம் ஒரு காலநிர்ணயம் செய்து அதற்குள்ளேயே நிறைவேற்றப்படவேண்டு மென்று சொல்லுவது பிரதிவாதி சுபர்பேரில் உள்ள பாத்தியதைப்பற்றி மாத்திரம். வாதிக்கு அந்த பாத்தியதையில்லை. அடமான சொத்தின்மேல் உள்ள பாத்தியதை நிற்கவே நிற்கிறது. ப்ரிவி கௌன்ஸில் தீர்ப்பு இப்படி இருப்பதால் இந்த வாதமும் செல்லாது.

கிரயபத்திரத்தில் தங்களுக்கு சேரவேண்டிய துகை பூராவும் சேர்ந்துவிட்டது என்று செப்பியிருப்பதால் இப்போது க்ரயசேஷம் சேரவேண்டுமென்பது, செல்லாதென்பது மற்றொருவாதம். இந்த கோர்ட்டில் ஹர்சண்ட் *v.* கிஷோர்சண்ட் (S. A. No. 1107 of 1909) கேஸில் வெப் *v.* மாக்பர்ஸன் (I. L. R. 31 Cal. 57) என்ற கேஸில் ப்ரிவி கௌன்ஸில் தீர்மானத்தைப் பொறுத்து கிரய பத்திரத்தில் கிரயத்துகை பூராவாக சென்றுவிட்டதாக செப்பியிருந்தபோதிலும் வாஸ்தவமாய் பணம் கொடுபடாதவரையில் அந்தபணம் கொடுக்கவேண்டியதுதா னென்று தீர்மானித்திருக்கிறார்கள். அந்த கேஸில் ப்ரிவி கௌன்ஸில் தீர்ப்பு, இங்கிலீஷ் லா படி கிரயதாரருக்கு கிரய சேஷத்திற்காக உள்ள பாத்தியதை ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட் படி இந்தியாவில் கிரயசேஷத்திற்கு உள்ள பாத்தியதை போன்றதல்ல அங்கேயுள்ள பாத்தியதை யீக்விடீ கோர்ட்டால் உண்டாகியது. ஆகையால் அந்த யீக்விடீ கோர்ட்டார் ஒவ்வொரு கேஸினுடைய சந்தர்ப்பங்களை உத்தேசித்து மாற்றிக்கொள்ளலாம். இந்தியாவிலோ சட்டத்தினுல் கொடுக்கப்பட்ட அதிகாரம் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட்படி கிரயசேஷத்திற்கு கிரய சொத்தின்பேரில் பாத்தியதை கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த பாத்தியதை இல்லாமல் போகவேணுமானுல் அதற்குத் தனியே உடன்படிக்கை வேண்டும். கிரயத்துகையை கொஞ்சகாலம் பிறகு பெற்றுக்கொள்ளுகிறேனென்பதாகவாவது, அல்லது அப்போதைக்கப்போது சிலாசிலாவாய் பெற்றுக்கொள்ளுகிறேனென்பதாகவாவது உடன்படிக்கையிருந்தால் அந்த உடன்படிக்கையினுலேயே கிரயத்துகைக்கு கிரய சொத்தின்பேரிலுள்ள அடமானம் போன்ற பாத்தியதை தவறிப்போகாது. ஆகையால் இந்த வாதமும் செல்லாது. கடைசியாக முதல் வாங்கினவன்பேரில் தான் செல்லுமேயல்லது அவனிடத்தில் பெற்ற 3-வது பேர்களை பாதிக்காதென்பது. இந்த வாதம் செல்லுமானுல் கிரயம் பெற்றவர் இறந்துபோனுல் கிரயத்துகைக்காக அவனுடைய வார்ஸ்கள்பேரில்கூட தாவா செல்லாது. ஆகையால் இந்த பாத்தியதை சொத்தை பொருத்ததால் அது எவரிடத்தில் இருந்தாலும் செல்லும். ஆகையால் இந்த பிரதிவாதிகள் வாதிகளுக்கு சேரவேண்டிய கிரயசேஷத்தை கொடுக்கவேண்டியவர்களே. ஆகையால் சிலவுடன் அப்பீல் தள்ளப்பட்டது.

CALCUTTA HIGH COURT.

கல்கத்தா ஹைகோர்ட்.

அப்பீல் No. 11 of 1914.

லக்ஷ்மி சந்த்ஜாவர்—அப்பீல் வாதி.

v.

ஹெமேந்த்ரப்ரஸாத்கோஷ் } பிரதிவாதி—அப்பீல் பிரதிவாதி

வட்டி செப்பியிராத ப்ராமிஸெரி நோட்டு—(உண்டி) வட்டி உண்டென்று ருஜுவிடக் கூடுமா?

வியாஜ்ஜியச் சுருக்கம்:—1912-ம் ௵ ஏப்ரல்௴ 14-௳ பிரதிவாதி வாதிபேருக்கு அறுபது நாள் தவணைக்கு 1,100-ரூபாயிக்கு ஒரு உண்டி கொடுத்திருந்தார். பிரதிவாதி தவணைக்கு பணம் செலுத்தவில்லை. வாதி 100-க்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ரூபாய் 5 விகிதம் வட்டி சேர்த்து கொடுக்கும்படியாய் பிரதி

வாதிக்கும் தனக்கும் உடன் படிக்கை உண்டென்றும் ஆகையால் தவணைக்குள் செல்லாதென்ற தொகைக்கு அந்த ரேட்டுபடி சேர்த்து கொடுக்கவேணுமாய் தாவா.

பிரதிவாதி உண்டி கொடுத்ததுண்டு. நிற்கும் துகைக்கு மாதம் ஒன்றுக்கு 100-க்கு வட்டி ஒன்ருக ஒப்புக்கொண்டதுண்டே தவிர தாவாவில் கண்டபடி 5 வட்டி உடன்படிக்கை கிடையாதென்று மறுத்தான்.

ஒரிஜினல் ஸைட் ஜட்ஜ் தீர்மானம்:—பிரதிவாதி ப்ராமிஸரி நோட்டை ஒப்புக்கொள்ளுகிருர். வட்டியைப்பற்றிதான் தாவா. பத்திரத்தில் வட்டி ப்ரஸ்தாபமில்லை. வாதி மாதம் ஒன்றுக்கு 100-க்கு வட்டி 5 உடன்படிக்கையென்று சொல்லுகிருன். பிரதிவாதி யில்லை யென்கிருன். வாதி உடன்படிக்கையை ஜூசெய்ய ஸாக்ஷியம் விடக்கூடுமா இல்லையா என்பது கேழ்வி. சாட்சி விடக்கூடாதென்று என்னுடைய அபிப்ராயம் எவிடென்ஸ் ஆக்ட், ஸெக்ஷன் 92-படி இது ருஜூவிடக்கூடாததாக இருக்கிறது. எழுத்து மூலமான உடன்படிக்கை ஏற்பட்ட போதே இந்த வட்டியைப்பற்றிய வாசா உடன் படிக்கையும் ஏற்பட்டதாக சொல்லுவதால் அது எவிடென்ஸ் ஆக்ட், 92-வது ஸெக்ஷன், 2-வது ப்ரொவிஸோபடி ருஜூவிடக்கூடாது.

ஆனபோதிலும் பிரதிவாதியே தன்னுடைய ஸ்டேட்மெண்டில் ஒன்று வட்டிக்குஒப்புக்கொண்டதாக சொல்லுகிறபடியால் 1,100-ரூபாய்க்கு தவணைத் தேதி முதல் நாளது தேதி வரையில் வருஷம் ஒன்றுக்கு 100-க்கு 12 வட்டியாகச் சேர்த்து 2-வது ஸ்கேல்படி காஸ்டும் கூடிய துகைக்கு நாளது தேதி முதல் வசூலாகும்வரை வருஷம் ஒன்றுக்கு 100-க்கு 6 வட்டியாக சேர்த்து கொடுக்கும்படியாக தீர்மானம். இந்த டிக்ரியின் மேல் வாதி அப்பீல் செய்தார்.

அப்பீல் தீர்ப்பு.—பிரதிவாதி தன்னுடைய ஸ்டேட்மெண்டில் வட்டி ஒன்று உடன்படிக்கை யுண்டென்று ஒப்புக்கொள்ளுகிறதினல் தான் எவிடென்ஸ் ஆக்ட், ஸெக்ஷன் 92-படி வட்டியைப்பற்றின உடன்படிக்கைக்காக ருஜூவிடக்கூடாதென்பது பொருந்துமோ பொருந்தாதோ என்ற சந்தேகத்திற்கு இடம் கொடுக்கிறது. அந்த ஸ்டேட்மெண்ட் இல்லாவிட்டால் 92-வது ஸெக்ஷன்படி வாதி ருஜூவிடக்கூடாதென்பது சந்தேகமில்லாமலிருக்கும். ஆனல் அந்தஸ்டேட்மெண்டினுல்வேறு உடன்படிக்கை உண்டென்றும் அந்த உடன்படிக்கை பத்திரத்தில் காணவில்லை யென்றும் வாதி சொல்லுவதற்கு அசல் கோர்ட் ஜட்ஜியும் அந்த வட்டியையும் சேர்த்து தீர்மானம் செய்திருக்கிறபடியால் இந்த வியாஜ்ய நிலைமைக்கு போதுமானதாக தோற்றுகிறது. ஆகையால் அப்பீல் சிலவுடன் தள்ளப்பட்டிருக்கிறது.

CALCUTTA HIGH COURT.

கல்கத்தா ஹைகோர்ட்.

அப்பீல் நெம்பர் 202 of 1913.

அப்துல்கரீம் அபூ அம்மத் கான் } பிரதிவாதி—அப்பீல் வாதி.

v.

அப்துஸ்சபான்சௌத்ரி மற்றவர்களும். } வாதிகள்—அப்பீல்பிரதிவாதிகள்.

ஸிவில் ப்ரொஸீஜர்கோட், ஸெக்ஷன் 92—மகுதி முத்தவல்லியை (தர்மகர்த்தாவை) நிவர்த்திக்கவேணுமாய் தாவா—வாதிகள் பிரதி ப்ரயோஜனத்திற்காக ராஜிசெய்து ஸூட் வுத்ட்ராசெய்கிறது சட்டப்படி செல்லுமா—தர்மம் பப்ளிக்கா ப்ரைவேட்டா என்று தீர்மானிக்காமல் ராஜீனமா ரிகார்டு செய்யக் கூடுமா?

வியாஜ்ஜியச் சுருக்கம்:—வாதிகள் அட்வாகேட் ஜெனரல் உத்திரவு பெற்று மசூதி முத்துவல்லியாகிய பிரதிவாதியை தள்ளிவிட வேணுமென்றும் இன்னும் வேறு சில அனுகூலங்கள் வேணு மென்றும் அட்வாகேட் ஜெனரல் சம்மதிபெற்று டாகா ஜில்லாஜட்ஜி கோர்ட்டில் 1910-ம் ஞு ஜனவரி மீ 25-ம் தேதியில் தாவாதாக்கல் செய்தார்கள். பிரதிவாதி வாதிகளுக்கும் தனக்கும் 1912 ஞு மார்ச் மீ 17 வ யில் ஏதோ சில நடவடிக்கைகள் நடந்திருப்பதாயும், அதைப்பொருத்து தங்களுக்குள் ஒரு அக்ரிமெண்ட் பிறந்திருப்பதாயும், அந்த அக்ரிமெண்டில் கண்டிருக்கிறபடி ஆர்டர் 23, ரூல் 3 படி இந்த தாவாவை டிஸ்மிஸ் செய்து விடவேணுமாய் மனுசெய்து கொண்டான். வாதிகள் அப்பேர்பட்ட ராஜி ஒன்றும் முடியவில்லே யென்றும் ஏதோ ப்ரஸ்தாபம் யிருந்தது. அது ஒன்றும் நிறைவேறி வரவில்லேயென்றும், எப்படி யிருந்தபோதிலும் வாதிகளில் இருவர் அதுகளில் சம்பந்தப்படவில்லேயென்றும், தாங்கள் வியாஜ்ஜியத்தை மேல்நடத்த சித்தமாயிருப்பதாயும் மனுவை தடுத்தார்கள். ஜில்லா ஜட்ஜி பிரதிவாதியின் மனுவை தள்ளிவிட்டு வியாஜ்ஜியத்தை மேல் நடத்தும்படியாய் உத்திரவு செய்துவிட்டார். பிரதிவாதி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

ஹைகோர்ட் தீர்ப்பு.—பிரதிவாதி இரண்டு மசூதிகளுடைய சிலவுக்காக அர்பணம் செய்யப்பட்ட சில சொத்துக்களே சொந்தத்தில் துர் விநியோகம் செய்திருப்பதாயும், இன்னும் அநேகவிதமான தோஷங்களேயும் சொல்லி இந்த பிரதிவாதியை முத்துவல்லி வேலேயிலிருந்து தள்ளிவிட்டு வேறு முத்துவல்லியை நியமித்து தர்மசொத்துக்களே ஸரிவர பரிபாலனம் செய்ய ஓர் ஸ்கீம் தயார்செய்யவேணுமாய் வாதிகள் தாவா. இந்த தாவா வெகுநாளாய் நடந்துவருகிறது. இப்போது ஆர்டர் 23, ரூல் 3-படி ஒரு அக்ரிமெண்டை ரிகார்ட் செய்து அதன்படி டிக்ரியும் கொடுக்காமல் மனுவை டிஸ்டிரிக்ட் ஜட்ஜி தள்ளிவிட்டதிலிருந்து இந்த அப்பீல் ஜில்லா ஜட்ஜி 92-வது ஸெக்ஷன் படி செய்திருக்கும் இந்த தாவாவில் இப்பேர்ப்பட்ட ராஜி சட்டப்படிக்கு செய்யக்கூடாதென்றும், ஆகையால் அக்ரிமெண்டு செல்லாதென்றும் தள்ளி விட்டார். அப்பீல்வாதியாகிய பிரதிவாதி இந்த தர்மம் பப்ளிக் தர்மம் அல்லவென்றும், ஆகையால் இந்த வியாஜ்ஜியம் ராஜிசெய்யத்தக்கதென்றும், அல்லவென்று பப்ளிக்தர்மம்தான் என்று கொண்டாலும் வாதிகள் எப்பவும் வியாஜ்ஜியத்தை வுத்ட்ரா செய்துகொள்ள அதிகாரமுள்ளவர்களாகையால் இந்த ராஜி அப்பேர்ப்பட்ட வுத்ட்ரா செய்தல்போல் ஆகுமே யல்லது வேறு அல்வென்று வாதிக்கிருர். இது பப்ளிக் தர்மமாயிருந்தால் ராஜீநாமா செய்யத் தகாது யென்பதைப்பற்றி சந்தேகமில்லே. இது ஒரு வேளே பப்ளிக் தர்மமாக ஏற்படும் பக்ஷத்தில் இந்த ராஜீநாமாவால் அந்த தர்மத்தில் பாத்யதையுள்ள மற்ற எல்லோருக்கும் விரோதம் உண்டாகும். இந்த ராஜீநாமா வுத்ட்ராசெய்தல் போன்றது தானென்று தோன்றவில்லே.

முதல் வாதி இந்த ராஜியால் விசேஷ ப்ரதி ப்ரயோஜனம் அடையவில்லே. ஆகையால் இந்த ஸ்வப்ரயோஜனத்திற்காக ஏற்பட்டபேரத்தை அக்ரிமெண்டாக ரிகார்டு செய்து இனிமேல் நடக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு இதை ஒரு ஸாக்ஷியமாக உபயோகிக்க உபாயமான ஒரு மனு. ஆகையால் இது பப்ளிக் தர்மமாயிருந்தால் கீழ் கோர்ட் ஆக்டர் சரியானதுதான்.

ஆனல் இன்னும் இந்த தர்மம் பப்ளிக்காப்ரை வேட்டா என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லே. மேல் விசாரணேயில் ப்ரைவேட் என்று ஏற்பட்டால் இந்த ராஜிநாமாவை ஒப்

புக்கொள்ளாதது பிரதிவாதிக்கே அனுகூலம். அப்படி அல்லவென்றும் இது பப்ளிக்சென்றும் ஏற்பட்டால் இந்த ராஜிநாமாவை ஒப்புக்கொள்ளுவது அந்த தர்மத்தில் பாத்தியமுள்ள எல்லோருக்கும் வெகு விரோதமாகும். ஆகையால் கீழ் கோர்ட் தீர்மானம் சரி இந்த அப்பீல் சிலவுடன் தள்ளப்பட்டது.

PRIVY COUNCIL

பிரிவி கவுன்சில்

அலகாபாத் ஹைகோர்ட் தீர்ப்பிலிருந்து அப்பீல்.

(43 of 1910 in Allahabad High Court 97 of 1912 in P. C.)

ஷியோஷன்கர்ராம் மற்றவர்களும் } வாதிகள்—அப்பீல் வாதிகள்.

v.

முஸ்ஸமத் ஜட்டோ கன்வார்மற்றவர்களும் } பிரதிவாதிகள்—அப்பீல்பிரதிவாதிகள்.

ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட், ஸெக்ஷன் 85—அடமானதாரரும் அடமானம்பெறறவரும்—அவிபக்த ஹிந்து குடும்பம்—குடும்ப மானேஜர்கள் மாத்திரம் பார்டிகள்—டிக்ரி குடும்பத்தை சேர்ந்த மற்றவர்களை பாதிக்குமா.

வியாஜ்ஜியச் சுருக்கம்.—முஸமத் ஜட்டோ கன்வார் என்னும் இதில் ப்ரதிவாதி 1887௵ ஸெப்டம்பர்மீ 16௨ சிலசொத்துக்களை அடமானம் பெற்றுயிருந்தாள். மற்றும் சில சொத்துக்களை 1891௵ ஜனவரிமீ 6௨ அடமானம் வாங்கிக்கொண்டாள் பிறகு ஹீராராம், துந்தாராம் என்கிற ஒரு அவிபக்த ஹிந்து குடும்ப மெம்பர்கள் தங்களுடைய பொது குடும்ப பிரயோஜனத்திற்காக மேற்கண்ட அடமான சொத்துக்களில்சிலவற்றை கிரயத்துக்குவாங்கி இன்னும் சில சொத்துக்களை சுவாதீன அடமானமும் பெற்றிருந்தார்கள். இதுகளெல்லாம் இதில் பிரதான பிரதிவாதியின் அடமானத்திற்கு பிறபட்டவைகள். ஆகையால் அவைகள் உள்ளடங்கினவை. 1895௵ பிரதான பிரதிவாதி தன்னுடைய அடமானங்களின் மேல் தாவா செய்து ஹீராராம், துந்தாராம் இவர்களை தன்னடமானங்களை மீட்டுக்கொள்வதற்காகவாவது அல்லது அவர்கள் பாத்யதையை விட்டுவிடவேண்டியதற்காகவாவது பார்டிகளாகச் சேர்த்திருந்தாள்.

அவர்களைத்தவிர அந்த குடும்பத்தில் இதர பாத்தியஸ்தர்களுமுண்டென்பது பிரதிவாதிக்கு தகவலிருக்கவில்லை. அந்த தாவாவில் பிரதிவாதி கோரினபடி டிக்ரி ஆய்விட்டது. அந்த டிக்ரிப்படி ஹீராராம், துந்தாராம் இந்தப் பிரதிவாதியினடமானங்களை மீட்டுக்கொள்ளாததால் இந்த பிரதிவாதிக் கனுகூலமாய் உறுதித்தீர்மானமாய் சொத்துக்கள் அவளுடையதாகின. இப்போது அப்பீல் வாதிகள் தாங்கள் ஹீராராம், துந்தாராமுடன் அவிபக்தகுடும்ப மெம்பர்களாகையால் தங்களை முன் அசல் வியாஜ்ஜியத்தில் பார்டிகளாக சேர்த்திருக்கவேண்டியது அவசியமென்றும் அப்படிச் சேர்க்காததால் அதில் பிறந்த டிக்ரி தங்களைக்கட்டுப்படுத்தாதென்றும், தாங்கள் இப்போது முந்தின அடமானங்களை மீட்டுக்கொள்ளத்தகும் என்றும் தாவா. அசல் கோர்ட்டில் சப்ஜட்ஜி அவர்கள் தங்கள் பாகத்துக்குண்டானசொத்துகளைமாத்திரம் மீட்டுக்கொள்ள பாத்யதை யுண்டென்றும், அடமானத்துக்குட்பட்டமொத்த சொத்துக்களையும் மீட்டுக்கொள்ள பாத்தியதை இல்லையென்றும் தீர்ப்பு செய்தார் அதனின்றும் ஹைகோர்ட்டுக்கு அப்பீல். ஹைகோர்ட்டில் ஹீராராம், துந்தாராம் இவர்களும் முந்தின அசல் வியாஜ்ஜியத்தில் தங்கள்குடும்ப பொது நன்மைக்காகவுமாகத்தான் நடத்தி வந்தார்களென்றும், அதில் நியாப்படித்தான் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறதென்றும் குடும்பத்தைச்சேர்ந்த எல்லா

மெம்பர்களேயும் பார்டிகளாக சேர்க்கவில்லே யென்கிற காரணத்தினலேயே முந்தின தீர்ப்புகளேயும் நிறைவேற்றின டிக்ரியையும் ரத்து செய்யத்தகாதென்று தாவாவைத் தள்ளி விட்டார்கள்

ப்ரிவிகௌன்சில் தீர்ப்பு.—அவிபக்த குடும்ப மானேஜர்கள் அந்த குடும்பங்களுக்கு ப்ரதிநிதிகளாக் நடத்திவரும் நடவடிக்கைகள் யாவத்தும் அந்த குடும்பத்தில் எல்லோரையும் கட்டுப்படுத்தும் என்பதுதான் இந்தியன் ஹைகோர்ட்டுகளினுடைய தீர்மானங்கள். இந்த வியாஜ்ஜியத்தில் அந்த தீர்மானங்களே நிவர்த்தித்து வேறு தீர்மானம் செய்யும்படியான சந்தர்ப்பங்கள் ஒன்றும் காணவில்லே குடும்ப மானேஜர்கள் அந்த குடும்ப நன்மையை உத்தேசித்து நடந்துவந்தார்களே யல்லது வேறுவிதமாய் நடந்தார்கள் என்று கொள்ள யாதொரு காரணத்தையும் காணும். பிரதிவாதிக்கு இந்த வாதிகளுக்கு பாத்தியதை யுண்டென்பது தகவலுமில்லே. ஆகையால் ஹைகோர்ட் தீர்ப்பை காயம் செய்யவேண்டுமென்பதற்கு சந்தேகமில்லே இந்த அப்பீல் சிலவுடன் தள்ளப்பட்டிருக்கிறது.

முக்கியமான தீர்ப்புகளின் சுருக்கம்.

மதருஸ் ஹைகோர்ட்.

O. S. Appeal No. 79 of 1912.

ஜட்ஜிகள்:—ஸர் ஆர்னல்ட் ஒயிட் சீப் ஜட்ஜ். மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட் பீல்ட்.

குப்பம்மாள்—அப்பீல் வாதி.

கட்டிபள்ளி கோபால செட்டி மற்றவர்களும் } அப்பீல்வாதி. பிரதிவாதிகள்.

தீர்ப்பு.—மதருஸ் கலெக்டெர் ஸர்டிபிகேட் ரெவின்யூ ரிஜிஸ்தரேயொழிய அதனல் அது எவர்கள் பேரிலிருக்கிறதோ அவர்களுக்கு சொத்துக்கு ஒரு பாத்தியதையாவது பந்தோபஸ்தாவது உண்டாகாது.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர். மிஸ்டர் ஜஸ்டிஸ் நேபியர்.

S. A. No. 1476 of 1910.

நூர்மகமத்ஸாஹெப் மற்றவர்களும் } அப்பீல் வாதிகள்.

கரீமா பீபீ அம்மாளும் மற்றவர்களும் } அப்பீல் பிரதிவாதிகள்.

தீர்ப்பு.—ஒரு மசூதியின் சொத்துக்களே தங்கள் சுவாதீனம் செய்யவேணு மென்று அந்த மசூதியில் தொழுது கொள்வோர்கள் தாவா செய்யத்தகாது.

அதாவது முத்துவல்லியை தள்ளி விட்டு வேறு முத்துவல்லியை நியமிக்கவாவது சொத்துக்களே செவ்வையாக பரிபாலனம் செய்ய தகுந்த ஸ்கீம் வேணு மென்றுவது தாவா செய்யக்கூடுமே தவிர சொத்துக்களே ஸ்வாதீனம் செய்யவேணுமென்று கேட்கத் தகாது.

C. R. P. No 53 of 1913.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஓல்ட் பீல்ட். சேஷகிரி ஐயர், ஜட்ஜிகள்.

1907ஞு இன்ஸால் வென்ஸி ஆக்ட் 3, ஸெக்ஷன் 22, லிமிடேஷன் ஆக்ட், ஸெக்ஷன் 12.

இன்ஸால்வென்ஸி கோர்ட் ஆர்டர்—காபிக்கு மனு கொடுத்து காபி பெறுகிறவரையில் ஆன நாள்—இன்ஸால்வென்ஸி ஆக்ட், ஸெக்ஷன் 22-படி அப்ளிகேஷன் போடவேண்டிய வாய்தாவில் கழிக்கக்கூடாது.

S. A. No. 2600 of 1912.

மதராஸ் எஸ்டேட் லாண்ட் ஆக்ட், ஸெக்ஷன் 53, கிளாஸ் 2—டெண்டர் செய்த பட்டா ஒரு பாகம் சரி மற்றொருபாகம் பிசகு—சட்டப்படி சேரவேண்டிய துகையை விட அதிக துகைக்கு ஜப்தி.

தீர்ப்பு.—பட்டாவில் சில பாகம் பிசகாயிருந்தபோதிலும் ஜப்தி சேரவேண்டிய தொகையை விட அதிக மொத்தத்திற்காக இருந்தபோதிலும் பட்டாவில் எவ்வளவு பாகம் சரியோ அதை அங்கீகரித்து கிரமமாய் சேரவேண்டிய தொகை எவ்வளவோ அவ்வளவு மட்டிற்கு ஜப்தியை ஸ்தாபிக்கவேண்டியதுதான்.

S. A. No. 427 of 1913.

ஹிந்து லா—ஸ்த்ரீதனம் கிரமமாக பிறந்த பிள்ளைக்கும் விபசாரத்தில் பிறந்த பெண்ணுக்கும்—வார்ஸ் பாத்பாபாத்யதை.

தீர்ப்பு.—ஹிந்து லாப்படி கிரமமான கலியாணத்தில் பிறந்த பிள்ளைகள் பெண்கள் இருக்க விபசாரத்தால் பிறந்த பெண்ணுக்கு தாய் ஸ்த்ரீதனமாக அடைந்த சொத்தில் யாதொரு பாத்யதையும் கிடையாது ஹிந்துலாவில் சூத்ரர்களில் விபசாரத்தில் பிறந்த பிள்ளைக்கு சொத்தில் பாத்யதை உண்டென்று வசனமுண்டு. இது சூத்திரர்களுக்கு மாத்திரமேயல்லது மற்றவர்களுக்கு அல்ல.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஹைகோர்ட்.

ஸிவில் ரிவிஷன் மனு நெ. 994 of 1912

ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்.

K. ராமநாத பட்டர்—வாதி—அப்பீல் வாதி.

v.

அச்சாவேரய்யர் வகையரு } பிரதிவாதிகள்—அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயிண்ட் :—ரிஜிஸ்டர் செய்யப்பட்ட குத்தகை.

வியாஜ்ஜியச் சுருக்கம் :—வாதி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட குத்தகை ஆதாரவை ஆதாரமாக வைத்துக்கொண்டு பாலக்காட்டு சப் ஜட்ஜி கோர்ட்டில் தீர்வையை வசூல் செய்வதற்காக ஸ்மால்காஸ் வியாஜ்ஜியம் கொண்டு வந்தார் (S. C. S. No 496 of 1912).

சப்கோர்ட்டார் தீர்ப்பு :—வியாஜ்ஜியம் காலாவதிதோஷத்திற் குள்ளாயிருக்கிறதென்று நியாயம் சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

வாதி 1887-ம் வருடத்திய 9-வது ஆக்ட், 25-வது பிரிவின்படி ஜக்கோர்ட்டில் ரிவிஷன் மனு செய்துகொண்டார்.

லாயர்கள்:—மனுதாருக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் C. மாதவநாயரும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு :—ரிஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதாரவின்பேரில் தீர்வையை வசூல் செய்யவேண்டியதற்காக கொண்டுவரப்படும் வியாஜ்ஜியங்களுக்கு 116-வது பிரிவை பொருந்துவதைக் குறித்து நம்முடைய சொந்த அபிப்பிராயம் எப்படியிருந்தபோதிலும் வைத்திலிங்கம் பிள்ளை *v.* தக்ஷிணாமூர்த்தி (1) கேஸ் ஆரம்பமாக உள்ள கேஸ்களில் அந்த ராஜதானி ஜக்கோர்ட்டார் செய்திருக்கும் தீர்ப்புகளுக்கு நாம் கட்டுப்படவேண்டும். அந்தத் தீர்ப்பின் கொள்கையே அம்பலவாணப் பண்டாரம் *v.* வாகுராம் (2) கேசில் பின்பற்றப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தப் பிரமாணங்களைக்கொண்டு வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்திற்குள்ளாகவில்லை என்று நியாயம் சொல்லி சப்கோர்ட்டார் டிக்கிரியை ரத்துசெய்து மறுபடியும் அந்த வியாஜ்ஜியத்தை பைஸல் வைத்துக்கொண்டு சட்டப்படி பைசல் செய்யவேண்டுமென்று சப்கோர்ட்டாருக்கு உத்திரவு செய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள். (1914 ம. வி. நோ. 223. K. Ramanadhan Pattar *v.* Achuta Varien (1914) M. W. N. 223 (24-2-1914.)

குறிப்புகள்.

(1) 3 சென். 76 Vythylingam Pillai *v.* Theckshana Murthi, 3 Mad. 76.

(2) 19 சென். 52, Ambalavana Pandaram, *v.* Vaguram 19 Mad. 52.

ARRANGEMENT FOR THE SITTINGS OF THE JUDGES.

From 7th to 18th SEPTEMER 1914.

ஸீசமூம் 7உ முதல் 18உ வரைக்கும் சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு ஜட்ஜிகள் ஸிட்டிங்கு லிஸ்டு.

APPELLATE SIDE.

Date.		Day of the Week.	First Bench.	Second Bench.	Third Bench.	Fourth Bench.	Fifth Bench.	Admission and Miscellaneous work.
Septr.	7th	Monday.	The Offg Chief Justice & Seshagiri Aiyar J.	Sankaran Nair & Spencer JJ.	Ayling & Hannay JJ.	Oldfield & Tyabji JJ.	Sadasiva Aiyar & Napier JJ	......
,,	8th	Tuesday.	The Offg. Chief Justice & Seshagiri Aiyar J.	Sankaran Nair & Spencer JJ.	Ayling & Hannay JJ.	Oldfield & Tyabji JJ.	Sadasiva Aiyar & Napier JJ.	......
,,	9th	Wednesday.	The Offg. Chief Justice & Seshagiri Aiyar J.	Sankaran Nair & Spencer JJ.	Ayling & Hannay JJ.	Oldfield & Tyabji JJ.	Sadasiva Aiyar & Napier JJ.	......
,,	10th	Thursday.	The Offg Chief Justice & Seshagiri Aiyar J	Sankaran Nair & Spencer JJ.	Ayling & Hannay JJ.	Oldfield & Tyabji JJ.	......	1. Sadasiva Aiyar J. 2. Napier J.
,,	11th	Friday.	The Offg. Chief Justice & Seshagiri Aiyar J.	Sankaran Nair & Spencer JJ.	Ayling & Hannay JJ.	Oldfield & Tyabji JJ.	......	1. Sadasiva Aiyar J. 2. Napier J.
			1st Appls. (7th–11th)	1st Appls. (7th–11th)	Crl. work & 2nd Appls. (7th–11th)	Mis. work & 2nd Appls. (7th–11th)	2nd Appls. (7th–9th)	
,,	14th	Monday.	HOLIDAY FOR SRI JAYANTI.					
,,	15th	Tuesday.	The Offg. Chief Justice & Seshagiri Aiyar J.	Sankaran Nair & Spencer JJ.	Ayling & Hannay JJ.	Oldfield & Tyabji JJ.	Sadasiva Aiyar & Napier JJ.	......
,,	16th	Wednesday.	The Offg. Chief Justice & Seshagiri Aiyar J.	Sankaran Nair & Spencer JJ.	Ayling & Hannay JJ.	Oldfield & Tyabji JJ.	Sadasiva Aiyar & Napier JJ.	......
,,	17th	Thursday.	The Offg. Chief Justice & Seshagiri Aiyar J.	Sankaran Nair & Spencer JJ.	Ayling & Hannay JJ.	Oldfield & Tyabji JJ.	......	1. Sadasiva Aiyar J. 2. Napier J.
,,	18th	Friday.	The Offg. Chief Justice & Seshagiri Aiyar J.	Sankaran Nair & Spencer JJ.	Ayling & Hannay JJ.	Oldfield & Tyabji JJ.	......	1. Sadasiva Aiyar J. 2. Napier J.
			1st Appls. (15th–18th)	1st Appls. (15th–18th)	Crl. work & 2nd Appls. (15th–18th)	Mis. work & 2nd Appls. (15th–18th)	2nd Appls. (15th–16th)	

ORIGINAL SIDE.

Date.		Day of the Week.	Final Disposal Court.		Issue Court.	Insolvent Court.	Chamber work & References.
			First Bench.	Second Bench.			
Septr.	7th	Monday.	Bakewell J. (*after insolvency*).	Kumaraswami Sastri J.	......	Bakewell J.	......
,,	8th	Tuesday.	Bakewell J. (*after chamber work*).	Kumaraswami Sastri J.	......	......	Bakewell J. (*after undefended cases*).
,,	9th	Wednesday.	Bakewell J.	Kumaraswami Sastri J. (*after references*).	Kumaraswami Sastri J.	......	Kumaraswami Sastri J. (*after issues*).
,,	10th	Thursday.	Bakewell J.	Kumaraswami Sastri J.	......	......	....
,,	11th	Friday.	Bakewell J.	Kumaraswami Sastri J.	......	......	....
,,	14th	Monday.	HOLIDAY FOR SRI JAYANTI.				
,,	15th	Tuesday.	Bakewell J. (*after insolvency*).	Kumaraswami Sastri J.	......	Bakewell J.	......
,,	16th	Wednesday.	Bakewell J. (*after chamber work.*)	Kumaraswami Sastri J.	......	......	Bakewell J. (*after undefended cases*).
,,	17th	Thursday.	Bakewell J.	Kumaraswami Sastri J. (*after references.*)	Kumaraswami Sastri J.	......	Kumaraswami Sastri J. (*after issues*).
,,	18th	Friday.	Bakewell J.	Kumaraswami Sastri J.	......	......	....

N. B.—The above arrangements are subject to modification. Whenever practicable the cases in the cause lists which are left undisposed of at the end of a week will be posted the following week before the work fixed for that week, subject to part-heard cases and criminal work.

Urgent Civil Appellate Side motions will be taken by the First Bench only (and must be moved at 11 A. M.), unless an Admission Court is sitting, in which case, if the motion can be heard by a single Judge, the application must be made before the Admission Court.

Urgent Criminal Appellate Side motions will be heard by the Bench before which the criminal work of the week is posted (and must be moved at 11 A. M.), unless an Admission Court is sitting, in which case, if the motion can be heard by a single Judge, the application must be made before the Admission Court.